# இந்திய துணைத் தூதரகம்
# யாழ்ப்பாணம்
***

யாழ் இந்திய துணைத் தூதரகமானது வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துடன் இணைந்து, ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, '"அனைவருக்கும் சித்தா" எனும் உயரிய விழிப்புணர்வு பரப்புரையின் அடிப்படையில் (20 மார்ச் 2022) மன்னார் முருங்கன் டொண் போஸ்கோ நிலையத்தில் நான்காவது இலவச "சித்த மருத்துவ முகாமை" நடாத்தியது.

2. மன்னார் மக்களின் அமோக வரவேற்பை பெற்ற இந்த சித்த மருத்துவ முகாமிற்கு 188-க்கும் மேற்பட்ட அனைத்து வயது பிரிவினரும் வருகை தந்து தங்களின் நோய்களுக்கான இலவச மருத்துவ ஆலோசனைகள் மற்றும் இலவச சித்த மருந்துகளை பெற்று பயனடைந்தனர்.

3. மாண்புமிகு இந்திய துணைத் தூதுவர் திரு.ராகேஷ் நட்ராஜ் சித்த மருத்துவ முறையானது நோய்களைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் முழுமையான மற்றும் இயற்கையான வழி என்று விவரித்து சித்த மருத்துவ முகாமை நிறைவு செய்தார். நிறைவு விழாவில் திருமதி.ஏ.ஸ்டான்லி டி மெல், மன்னார் மாவட்ட அரச அதிபர், (திருமதி) K. ஜெபனமகணேசன், ஆணையாளர், சுதேச வைத்தியத் திணைக்களம், வட மாகாணம், மற்றும் சமூக வைத்திய அதிகாரிகள் மற்றும் சித்த வைத்தியர்கள் உட்பட 75-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

4. நிகழ்வின் சில புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

***

யாழ்ப்பாணம்
21 மார்ச் 2022